★ ஆசிரிய ஒன்றிய செயலகத்தில் மாத்தயா

# யுத்தக்கலையை அறிய மக்கள் முன் வருவதில்லை

''இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யதார்த்த பூர்வமான சிந்தனையை எற்படுத்துவதற்கு எமது கல்வி அமைப்பு உதவவேண்டும். நெருக்கடியான நிலையில் இருந்து விடுபடக் கூடிய வழியைக் சிந்திக்கத் தூண்டும் உணர்வை எமது கல்வி அமைப்பு உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இந்தப் பணியை தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்''. இவ்வாறு நேற்று நல்லூர் பகுதியில் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியச் செயலகத்தை குத்து விளக்கேற்றி திறந்து வைத்த பின் ஆசிரியர்கள் மத்தியில் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா அவர்கள் கூறினார். அவர் மேலும் தொடர்கையில் ''ஆனையிறவுப் போரிலே பல வழிகளில் மக்கள் எம்முடன் ஒத்துழைத்தார்கள். அங்கு புலிக் கொடி ஏறும் என்ற உற்சாகத்தில் செயல்பட்டார்கள். ஆனால் ஏதோ வழியில் இராணுவம் நுழைந்து —04ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நானகு விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 265 பிரசோற்பத்தி ஆவணி 04 (20-08-1991) செவ்வாய்

## தற்கொலைப்படையின் மூவர் கொழும்பு வந்துள்ளனராம்!

விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த மூவர் வெடிகுண்டுகளுடன் கொழும்பு வந்துள்ளதாக நேற்று ரூபவாஹினி தெரிவித்தது இவர்களின் அடையாளங்களை குறிப்பிட்டு இவர்களை கைது செய்ய தகவல் தருமாறும் கொழும்பு வாசிகள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இவர்கள் அண்மையில் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்ட வரதன் என்பவரால் தாக்குதலுக்கு பயிற்சியளிக்கப்பட்டவர்கள் எனவும் ரூபவாஹினி எச்சரித்தது.

□ போர்த்துளி:

### வேளாண்மை

விடுதலையின் வித்து
முளைத்தோங்கிவளர்கிறது
படுகளத்தில் வீழ்இன்ற
பாலகரின் குருதியினால்
—செழித்து வளர்கிறது!

—வாஞ்சி

# ஜனாதிபதி கோர்பசேவ் பதவி கவிழ்க்கப்பட்டார்!

## புதிய ஜனாதிபதியாக கெனாடியெனயேவ்

சோவியத் ஜனாதிபதி மிகேயில் கொர்பசேவ் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டுள்ளார் புதிய தலைவராக உப ஜனாதிபதியாக இருந்த கெனாடியெனயேவ் (54) பதவி யேற்றுள்ளார் நிர்வாகத்திற்கு என உயர்மட்ட அரச குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கொர்ப்பசேவ் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக 'ராஸ' செய்தில்தாபனம் திடீரென அறிவித்தது புதிய தலைவராகபதவியேற்றுள்ளகெனாடி யெனயேவ் தலைமையில் கே. ஜி. பி புலனாய்வுக் குழுத் தலைவர் குர்சேவ், பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், பதில் ஜனாதிபதி ஆகியோர் அடங்கிய உயர் மட்டக் குழுவும் அமைக்கப்பட்டது.

இத்திடீர் அறிவிப்பை யடுத்து மொஸ்கோ எங்கும் இர்ராணுவ கவசவாகனங்கள், டாங்கிகள் காணப்பட்டன. செஞ்சதுக்கம், ரஷ்ய விமான நிலையம் எங்கும் ஒருவித அமைதி நிலவியது

ஆட்சிமாற்றப்பட்டமையை —04ஆம் பக்கம் பார்க்க

## கோர்பசேவ் கருங்கடலருகே தடுப்புக்காவலில்!

பதவி நீக்கப்பட்டுள்ள முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கு என்ன நடந்தது என்பது குறித்துஊர்ஜிதமாகவில்லை.

கருங்கடலின் அருகேயுள்ள கிரமியர் என்ற தனது ஓய்வுப் பகுதியில் அவர் வீவில் நின்றபோதே இப்பதவி கவிழ்ப்பு நிகழ்ந்தது. இவர் அங்கேயே இராணுவத்தின — 04ஆம் பக்கம் பார்க்க

## சோவியத் ஆட்சி கவிழ்ப்புக்கு மேற்குலகம் அதிர்ச்சி!

சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள பதவி மாற்றம் மேற்குலக நாடுகளிலும் எதிரொலித்துள்ளது, அமெரிக்கா பிரிட்டிஷ், ஜப்பான், பிரான்ஸ்தலைவர்கள்கொர்ப்பசேவ் பதவிஇறக்கப்பட்டது குறித்து ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

கொர்ப்பசேவ் இந்நாடுக —04ஆம் பக்கம் பார்க்க

## சோவியத்தை காப்பாற்றவே பதவியேற்றதாக யெனயேவ்

சோவியத் இராணுவத்தினதும் கே. ஜி. பி யினதும் ஆதரவில் பதவியேற்றுள்ள புதிய சோவியத் ஜனாதிபதி கெனாடி யெனயேவ், சோவியத் குருட்டுத்தனமாக அழிவை நோக்கிச் செல்வதை தடுக்கவே தாம் பதவியேற்றதாக நேற்று அறிவித்தார்.

இதன் மூலம்சோவியத் யூனியன் கம்யூனிசபாதையில் —04ஆம் பக்கம் பார்க்க

## சோவியத் ராணுவத்தினர் போக்கில் மாற்றமில்லை?

சோவியத் யூனியனில் பதவி மாற்றம் ஏற்பட்டபோதிலும் கிழக்கு ஜேர்மனியிலிருந்து அதன் படை வாபஸ் பெறுவது தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1994 இற்கு முன் சோவியத் படை அனைத்தும் வாபஸாகும் என அங்கு நிலை —04ஆம் பக்கம் பார்க்க

## கோர்பசேவ் பதவி நீக்கத்திற்கு யெல்ஸின் கண்டனம்

கொர்ப்பசேவ் பதவி கவிழ்க்கப்பட்டமை குறித்து ரஷ்ய குடியரசுகளின் ஒன்றான சோவியத்குடியரசின் தலைவர் பொரிஸ்யெல்ஸின் கண்டனம் தெரிவித்துள்ளார்,

இந்த சதிக்கு ஆயுதப்படையினர் ஆதரவு வழங்கக் கூடாதுஎனக்குறிப்பிடும் அவர் — 04 ஆம் பக்கம் பார்க்க

## பரந்தனில் விமானங்கள் குண்டுவீச்சு என அறிவிப்பு

பரந்தனில் விமானப்படையின்விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடாத்துவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

புலிகளின் நிலைகளை இளிநொச்சி நோக்கி நகர்த்திவிடவே இத்தாக்குதல் நடாத்தப்படுவதாக அமைச்சு மேலும் தெரிவித்தது.

## காரைநகரிலிருந்து ஷெல தாக்குதல

நேற்று பிற்பகல் 1.30 மணி தொடக்கம் நீண்ட நேரமாக காரைநகரிலிருந்து இராணுவத்தினரால் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

—04ஆம் பக்கம் பார்க்க

## அகதி முகாம் மீது ஹெலி தாக்கு

நேற்று முன்தினம் அளவெட்டி தெற்கில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல் நடாத்தியதில் அகதி முகாமொன்றின் கூரைகள் சேதமடைந்தன.

இரண்டு விவசாயிகள் இத்தாக்குதலில் காயமடைந்ததாகவும் அறிக்கப்படுகின்றது.

(02)

## தபால்கள் சென்றன

யாழ்குடா நாட்டுத் தபாற்பொதிகள் நேற்று அதிகாலை யாழ்பிரதம தபாலகத்தினால் கொழும்பு செல்லும் கப்பலில் அனுப்பி வைப்பதற்காக பருத்தித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டன.

(06)

## உ.அ.விநியோகம் இடை நிறுத்தம்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய உலர் உணவு அட்டை விநியோகம் இம்மாதம் 9 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட் —04ஆம் பக்கம் பார்க்க

## தையற் பயிற்சி நிலையம்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள புலோலி உபய கதிர்காமத்தில் யாழ் தொழில் திணைக்களம் படித்த யுவதிகளுக்கான தையற் பயிற்சி நிலையத்தை இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. (11)



## சிறு விளம்பரம்

### புத்தகம்

டாக்டர் எம். கே. முருகானந்தன் எழுதிய (1) எயிட்ஸ் (2) போதையைத்தவிருங்கள் மருத்துவ நூல்கள் விற்பனைக்கு வந்துள்ளன. உயர் கல்விமாணவர்கள் சுகாதார சேவையாளர்கள், சமூகசேவையாளர்களுக்கு மிகவும் உதவக்கூடியன. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். 08111

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவாயினும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதவும். கைரேகை, விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு:- டாக்டர் தசிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி நல்லூர் வடக்கு. 08109

### ஜோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை/சாபதோஷங்கள் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்திபரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகின்றோம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம் 146, பருத்தித்துறை வீதி, அரசடிச்சந்தி, நல்லூர். 08072

### தேவை

ஜாம், சோஸ் போத்தல்கள் (Jam, Sauce Bottles) ரூபா 3/- இற்கு குறையாமல் கொள்வனவு செய்யப்படும். கிழமை நாட்களில் தொடர்பு கொள்ளவும். Taste Line Industries (pvt) Ltd. 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். 08094

### வைத்தியம்

வைத்தியக் கல்லூரி விரிவுரையாளரின் மேற்பார்வையில் சகல ரோகங்களுக்கும் இலவச அக்குபஞ்சர் வைத்தியம் செய்யப்படும். ஹோமியோபதி சிகிச்சையும் அளிக்கப்படும். தொடர்பு: நவீன வைத்தியசாலை 101, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 08103



# சிறிய செய்திகள்

## தபால்கள் விநியோகம்

இரண்டுமாதமாக வவுனியாவில் தேங்கிக் கிடந்த கிளிநொச்சி மாவட்டத்திற்கான தபாற்பொதிகள் செஞ்சிலுவைச்சங்க வாகனம் மூலம் கிளிநொச்சி தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டு நேற்றுமுதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (31)

## அலுவலகம் இடமாற்றம்

பரந்தன் தபாலகம் தற்போது கிளிநொச்சி தபாலகத்தில் இயங்கி வருகிறது. பரந்தன் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் தங்களுக்கான தபால்களை கிளிநொச்சி தபாலகத்தில் இயங்கும் பரந்தன் தபால் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. (31)

## பயணிகள் ரயில் மோதிப் பலி

தென் சீனாவில் நேற்று முன்தினம் ரயிலில் இருந்து கீழே குதித்த 17 பேர் மற்றொரு ரயிலினால் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே பலியானார்கள்

தீப்பிடித்த ரயிலிருந்து கீழே குதித்துத்தப்ப முயன்றபோதே இவர்கள் மற்றொரு ரயிலினால் மோதப்பட்டு பலியானார்கள்.

## சுகாதார அதிகாரி விஜயம்

இம் மாதம் 30 ஆம் திகதி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அம்பன் நாகர்கோயில் பகுதியில்உள்ள அகதி முகாம்களைப் பார்வையிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (39)

## சைக்கிள் மாயமறைவு

பனை மரத்தின் கீழ் தமது சைக்கிளை நிறுத்தி விட்டு மாலை வேளையில் பனையில் ஏறி கள் இறக்கிக் கொண்டிருந்த சீவல் தொழிலாளி ஒருவரின் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

பண்டத்தரிப்பில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (13)

## பூநகரியில் உப்பு விளைச்சல்

பூநகரி கறுக்காய்தீவு செல்லையாதீவு இராமன் களப்பு பகுதியில் அதிகளவு உப்பு விளைந்துள்ளது

இதனை செட்டிய குறிச்சி கறுக்காய்தீவுப் பகுதி மக்கள் சேகரித்து பூநகரி ப. நோ.கூ. சங்கம்கறுக்காய்தீவு, செட்டிய குறிச்சி கிளைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

தனியார் வியாபாரிகள் 1 கிலோவினை ரூபா 3/- வீதம் கொள்வனவு செய்கின்றனர்.



## கவனிக்கவும்

மில்க்வைற் சலவைத்தூள் நீல வண்ணத்தில் அச்சடிக்கப்பட்ட புதிய பக்கற்றில் விற்பனையாகிறது (வழமையான பொலித்தீன் பக்கற் கிடையாததால்) 50 கிறாம் அடைக்கப்பட்டது.

100 வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து அழகியதோர் உள்ளூர் உற்பத்தி லேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள்.

மில்க்வைற் யாழ்ப்பாணம்
08114

## நடிப்பு ஆர்வமுள்ளோர் கவனத்திற்கு

"முரசொலி" நிறுவனத்தின் ஆதரவில்

'நாடக அரங்கக் கல்லூரியினர்' தயாரிக்க இருக்கும் பாரதியின்

## "பாஞ்சாலி சபதம்"

நாடகத்தில் நடிப்பதற்கு நடிகர் நடிகையர் தேவை. பங்குபற்ற விரும்புவோர் 24. 08. 91 சனிக்கிழமை பி ப 3. 00 மணிக்கு யாழ் /செங்குந்த இந்துக்கல்லூரியில் (கல்வியங்காடு சந்தைக்கருகாமையில்) சமூகம் தரவும்.

நாடக அரங்கக் கல்லூரி
A 08115



## தொடர்ந்தும் தட்டுப் பாடு

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மலேரியா தடுப்புக்குளிசைக்குத் தொடர்ந்தும் பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிப் பகுதியில் மலேரியா நோய் வேகமாகப் பரவிவருகிறது. இத் தட்டுப்பாட்டினால் இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தடுப்பு வழங்க முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (17)

## கோண்டாவிலில் தொடர்சொற்பொழிவு

கோண்டாவில் மேற்கு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் சைவ அறிஞரும் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளருமான சிவ. மகாலிங்கம் உற்சவ கால தொடர் சொற்பொழிவுகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமான திருமுறைகள் பற்றிய சொற்பொழிவுகள் 25 ஆம் திகதிவரை நடைபெறஉள்ளன.

இத் திருமுறைகள் பற்றிய சொற் பொழிவுகளை அடிப்படையாக வைத்து இவ் ஆலய இந்து இளைஞர் மன்றத்தில் சைவ பாடசாலை மாணவர்களுக்கிடையே அறிவுப் போட்டி ஒன்றும் நடாத்த பட உள்ளது. எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெற உள்ள போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொளளப்படுகின்றன. 21

## டொனால்ட் போட்டிகள்

டொனால் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக சென்றலையிட்ஸ விளையாட்டுக் கழகம் நடாத்தும் 50 பந்து மாற்றங்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன் தினம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதிப் போட்டி ஒன்றில் கொக்குவில் விளையாட்டுக் கழக அணியை ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 87 ஓட்டங்களால் தோற்கடித்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ அணி ஆரம்பத்தில்ஒன்றன்பின்ஒன்றாக6 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரமே பெற்று இக்கட்டான நிலையில் இருந்தாலும், அதில் துடுப்பாட வந்த சதீசனும், சூரியகுமாரும் சோடி சேர்ந்து வெகு நிதானமாக ஆடி முறையே 77,66 ஓட்டங்களைப் பெற்றதினால், அணியின் ஓட்ட எண்ணிக்கை 50 பந்து மாற்றங்களுக்கு 8 இலக்குகள் இழப்பிற்கு 195 ஆக உயர்ந்தது.

கொக்குவில் அணி அதன் துடுப்பாட்டத்தில் 35.3 பந்து மாற்றங்களில் சகல இலக்குகளையும்பறிகொடுத்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் தோல்வியைத்தழுவ வேண்டிதாயிற்று. (16)



யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை

## வெளி நிலைப் பட்டப் படிபிற்காகப் பதிவு செய்தல் 1990/91

## வர்த்தக முதற் தேர்வு/கலை முதற் தேர்வு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1990/91 கல்வியாண்டில் வெளி நிலைத் தேர்வு நாடிகளாக வர்த்தக முதற் தேர்வு/கலை முதற் தேர்வுகளுக்குப் பதிவு செய்ய விரும்புடைய தகைமை பெற்ற ஆட்களிடமிருந்து 1991 செப்தெம்பர் 30 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்களும் உரிய விவரங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிநிலைப் பதிவு தேர்வு அலகிலிருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1991 ஆகஸ்ட் 21ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிறாப்பரிடம் 50/- ரூபா செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும் தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 08/- பெறுமதியுடைய முத்திரை யொட்டப்பட்ட 38 × 25 ச. மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

இவ்வாண்டு கலை முதற் தேர்வு / வர்த்தக முதற் தேர்வு என்பவற்றிலிருந்து விலக்குப் பெற விரும்புவோர் அல்லது கலை முதற் தேர்வு/வர்த்தக முதற்தேர்வு தவிர்ந்த ஏனைய தேர்வுகளுக்காகத் தமது பதிவுகளை மற்றைய பல்கலைக்கழகங்களிலிருந்து இப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றிக் கொள்ள விரும்புவோர், ஆகியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பதிவாளர். 08116

# காங்கேசனுக்கே கப்பல்!

## பாதுகாப்பு அமைச்சு புதிய நிர்ப்பந்தம்

உணவுப்பொருள்களை இறக்குவதற்கு காங்கேசன்துறைமுகத்தை மட்டுமே பயன்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

இது தொடர்பான பணிப்புரை வடபகுதிக்கான உணவுப்பொருள் விநியோகத்திற்குப் பொறுப்பான புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை துறைமுகத்தை கப்பலில் இருந்து உணவுப்பொருள்களை இறக்குவதற்குப் பயன்படுத்துவதை படிப்படியாக நிறுத்தி, அவ்வேலைகளை காங்கேசன்துறை துறைமுகத்தில் மட்டுமே மேற்கொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

## கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக விவசாயக் காணிப் பதிவு

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட 25 கிராமசேவை அலுவலர்கள் பிரிவு தோறும் உள்ள நெற்காணிகள், விவசாயக் காணிகளைப் புதிய பிரிவின்படி புதிதாகப் பதிவு செய்துகொள்ளுமாறு சுழிபுரம் கமநல சேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் வலிமேற்கிலுள்ள சகல கிராம சேவை அலுவலர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

சகல விவசாயிகளும் தத்தமது கிராமசேவை அலுவலர்களைச் சந்தித்துத் தம்மிடமுள்ள நெற்காணிகள், விவசாயக் காணிகளைப் புதிதாகப் பதிவு செய்து கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

புதிய முறைப்படி பதிவு செய்துகொள்ளாது உற்பத்தியில்- செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (18)

## விவரம் சேகரிப்பு

இலங்கை அதிபர் சேவைI, II, III சேர்ந்தவர்களின் விவரங்களைஅவர்களது நியமனத் திகதி தொடக்கம் அனுப்பி வைக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளையும் கோரியுள்ளார்.

மேலும் அதிபர்l I, II, II ற்குரிய வெற்றிட விவரங்களையும் கோட்ட ரீதியாக அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (15)

## முதலாம்தர அதிபர்களுக்கு கல்விச்சேவை நியமனம்

1973ஆம் வருடத்தினுள் இலங்கை அதிபர் தரம் III பதவியைப் பெற்று அதாவது 1985 - 01 - 01ல் இருந்து 1ஆம் தர அதிபர்களாகத் தற்போது சேவையாற்றுபவர்களுக்கு 21 - 4 - 82ஆம் திகதியிலிருந்து இலங்கை கல்விச் சேவையில் 5ஆம் வகுப்புக்கு நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தற்சமயம் சேவையாற்றும் மேற் கூறிய அதிபர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் கல்வி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார் (15)

## சவுதியிலிருந்து வந்த சடலத்தையும்

## வடக்கேகொண்டுவரஅனுமதிஇல்லை

சவுதி அரேபியா நாட்டில் கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்தபோது அகால மரணமடைந்த பண்டத்தரிப்பை சேர்ந்த அந்தோனிமுத்து மரியசீலன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலம் கொழும்புக்கு அவர்கடமையாற்றிய சவுதி அரேபியா நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இந்தச் சடலத்தை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாததினால் அதனைக் கொழும்பிலேயே அடக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## வடபகுதி நிலைமைகளை நன்கறிந்த பற்றிக்குருஸ் விபத்தில் மரணம்

கொழும்பு ஏ. பி. வெளிநாட்டுச் செய்திச் சேவை நிருபர் பற்றிக் குரூஸ் அகால மரணமானார்.

கொழும்பில் நடந்த ரயில் விபத்தில் இவர் மரணமானார்.

கடந்த ஏழு வருடங்களாக இவர் மேற்படி நிருபராகப் பணி புரிந்தவர்.

மிகவும் இக்கட்டான காலகட்டங்களில் வட-கிழக்குப் பகுதிகளுக்கு நேரில் விஜயம் செய்து செய்திகளைச் சேகரித்தவர் அத்துடன் இப் பகுதி நிலைகளை நன்கு அறிந்தவர்.

முதன் முதலில் புலிகளின் தலைவர் பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டின் செய்திகளை உலக நாடுகளுக்கு அனுப்பி வைத்தது மேற்படி செய்திச் சேவையாகும். (12)

## பாவித்த சவர்க்காரமும் கொண்டுவரத் தடை!

பாவித்த சவர்க்காரம் கொண்டு வருவதற்குக்கூட அனுமதி மறுக்கப்படுகிறதாம்

அண்மையில் கொழும்பிலிருந்து பாவித்த சவர்ககாரம் கொண்டுவந்த ஒருவரிடமிருந்து இராணுவத்தினரால் அவை பறித்தெடுக்கப்பட்டனவாம்.

அனுராதபுரம் ஸ்ரீலங்கா இராணுவத் தடைமுகாமில் வைத்தே இராணுவத்தினரினால் இவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (17)

## ஜனாதிபதி பதக்கம்

தமிழ்நாடு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரத்திற்கு ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்டுள்ளது

விடுதலைப்புலிகள் இயக்க அங்கத்தவர்களைக் கைது செய்ய தீவிரம் காட்டியமைக்காகவே இவருக்கு இந்தக் ,கௌரவம்' வழங்கப்பட்டுள்ளதாம்.

## வடமராட்சி கிழக்குப் பகுதியில்

## 19 மைல்பிரதேசத்தில்மக்கள்இல்லை

வடமராட்சி கிழக்குப் பகுதியின் மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையுள்ள 19 மைல் பிரதேசத்தில் மக்கள் நடமாட்டம் எதுவும் இல்லை இப்பிரதேசம் மயானம் போல் காட்சி தருகின்றது.

வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரையிறக்கப் பட்டதைத் தொடர்ந்து அப் பகுதிகளில் இருந்து மக்கள் முழுமையாக வெளியேறியுள்ளனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் காரணமாக 400 இற்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இப்பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் எந்நேரமும் வட்டமிட்டுச்செல்கின்றன. கடற்படைப்படகுகள் கரைப் பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. (24, 10)

## யேசுநாதரின்சொந்தக்குரலில் 'மலைப்பிரசங்கத்தைக்' கேட்கவாய்ப்பு!

1990 ஆம் ஆண்டு 'ஒனாசிஸ்" விருது பெற்ற 'புல்பிரைட்' என்ற அமெரிக்க விஞ்ஞானி, கிட்டத்தட்ட 20 நூற்றாண்டுகட்கு முன்பு, இயேசுக்கிறீஸ்துநாதர் ஆற்றிய உரைகளைப் பிரதானமாக அவரின் புகழ்மிக்க மலைப்பிரசங்கத்தை,'மார்க்கோனியின்' தத்துவத்தை அடிப்படையாக வைத்து, வான் அலைகளில் இருந்து கிரகிக்க முனைப்புடன் முனைந்து வருவதாகவும் அவரின் முயற்சியில் ஓர் அளவு வெற்றி தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

'நம் ஒவ்வொருவரினதும் வாயில் இருந்து புறப்படும் ஒலிகள் அத்தனையும் வான் அலைகளில் சங்கமம் ஆகி வானில் மிதந்து கொண்டிருக்கின்றன. அவைகள் ஒருபோதும் எக்காரணங் கொண்டும் அற்றுப்போவதில்லை' என்பது வான் ஒலியைக் கண்டுபிடித்த மாக்கோனியின் தத்துவம். (16)

## ஹெலிதாக்கிப் படகுசேதம்

## கடலுக்குச் செல்ல மீனவர் அச்சம்

பூநகரி ஞானிமடம் கடல் பகுதியில் படகில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நால்வர் மீது கெலிக்கொப்டரிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

நால்வரும் கடலில் பாய்ந்து நீரினுள் மூழ்கிப் பின்னர் கரையை நீந்தி அடைந்ததாகவும் படகு சேதமடைந்தநிலையில் கரையை அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேபோல் பூநகரி ஆனைகட்டி கடற்பகுதியிலும்ஹெலிகள் பறந்து திரிவதாலும், பரா வெளிச்சக் குண்டுகள் ஆனையிறவு முகாமிலிருந்து ஏவப்படுவதாலும் பூநகரி-செட்டியகுறிச்சி மீன் பிடித் தொழிலாளர்கள் ஞானிமடம், ஆனைகட்டிக் கடற்பகுதிகளிற்குச் சென்று தொழில்புரிய அஞ்சுகின்றனர். (31)

## தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு

## பயிற்சி வழங்கத் திட்டம்

இலங்கையில் உள்ள தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்குச் சரியான பயிற்சி இல்லை என சமீபத்தில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற தொடர்பியலும், தொடர்பு சாதனங்களும் என்ற நான்கு நாள் கருத்தரங்கில் பலருமே சுட்டிக் காட்டினார்கள்.

தமிழ் பத்திரிகையாளர்களுக்கு இது தொடர்பான பயிற்சிநெறி ஒன்றினை மன்றக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமெனக் கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள் விடுத்த வேண்டுகோளை மன்றக் கல்லூரி இயக்குநர் ஏற்றுக் கொண்டுள்ளார். (12)

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சிறுகதை, கட்டுரைப்போட்டிகள்

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களில் ஆசிரியர்களை கௌரவிப்பதற்காக ஆசிரியர்களிடையே சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டிநாடகம், ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒழுங்குபடுத்தி சிறந்தவைகளை தெரிவு செய்து சான்றிதழ்கள் வழங்கவும்இவற்றைவெளியீடுசெய்வதற்கும் கல்விஉயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி நாடகப் போட்டி என்பவற்றின் தலைப்பு கல்வித்துறையைச் சார்ந்ததாகவும் கற்பித்தல் தொழிலுடன் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆய்வு செய்யப்பட்டவரின் பிரதேசத்தில் கல்வியியலில் 100 ஆண்டுக் குட்பட்ட காலகட்ட மாற்றங்களை குறிப்பிடுவதாக இருக்க வேண்டும். 15

## இனப்பிரச்சினை தீர்வுக்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு

சர்வகட்சி மாநாட்டு தீர்மானங்களுக்கேற்ப இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காணும் பொருட்டு பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப் படுகின்றது.

இன்று 20 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள பாராளுமன்றக் கூட்டத்தொடரின்போது இக்குழுவில் அங்கம் வகிக்கவுள்ள உறுப்பினர்கள் விவரம் தெரிவிக்கப்படும்.

## ஊர்வலம்

அரசினால் விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையிற்கு எதிராகமாபெரும் எழுச்சி ஊர்வலம் 23ல் பூநகரியில்நடைபெறவுள்ளது.

# ஆணைக்குழு அமைக்க பத்திரிகையாளர் எதிர்ப்பு

வெகுஜன தொடர்பு சாதன ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்தை நிராகரிக்க இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸ அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவி மற்றும் சகல அரசியல் கட்சித் தலைவர்கள் எம்.பீக்களுக்கு இத்தீர்மானத்தை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் முறைப்படி அறிவிக்கவிருக்கிறது.

இன்று தேவைப்படுவது வெகுஜன தொடர்பு சாதன ஆணைக்குழு அல்ல. பத்திரிகையாளர்கள் அனுபவிக்கும் சுதந்திரத்தை மேலும் அதிகரிப்பதேயாகும் என்றும் இம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. 08

## தி. மு. க. ஆலடி அருணா தகவல்

# சிதம்பரம் மீதான தாக்குதல் அ. தி. மு. கவின் வேலையே

இணை அமைச்சர் சிதம்பரம் மீதான தாக்குதல் அ. தி. மு. கவினரே செய்ததாக தி. மு. க. பிரமுகரான ஆலடி அருணா தெரிவித்துள்ளார்.

அ. தி மு. க. முக்கிய உறுப்பினர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர்! அமைச்சர் சிதம்பரம் வரும்போது பகிஷ்கரிக்க] வேண்டும் என அ. தி. மு. க. தொண்டர்களுக்கு தெரிவித்திருந்தார் எனவும் அருணா கூறியுள்ளார்.

அமைச்சர் சிதம்பரம் மீது அ. தி. மு. கவினர் தாக்குதல் நடாத்தவில்லை என முதல்வர் ஜெயலலிதா கூறியிருப்பதும் தெரிந்ததே.

# தமிழகத்தில் ஈழ அகதிகள் துன்புறுத்தப்படுகின்றனர்

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட காலம் முதல் இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகள் இந்திய இராணுவத்தினராலும் தமிழகப் பொலிஸாராலும் தாக்கப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர்.

வேலூர், தாம்பரம், சென்னை போன்ற இடங்களில் உள்ள அகதிகள் படையினரால் வாரத்திற்கு ஒருமுறை சோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் பின்னர் படையினர் விசாரணைக்கென சில இளைஞர்களை ட்ரக்குகளில் ஏற்றிச் செல்வதாகவும் நாடுதிரும்பிய ஒருவர் தெரிவித்தார்.

---

### சோவியத்...

ளின் தீவிர ஆதரவாளர் என்பதும் இந்நாடுகளின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளையே சோவியத்திலும் அமுல்ப்படுத்த தீவிரமாக முயன்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேட்டோ அமைப்பு அவசர மாநாட்டை கூட்டியுள்ளது. இஸ்ரேலும் சோவியத்திலுள்ள தனது யூதர் பிரஜைகளின் பாதுகாப்புக்குறித்துஆராயவிசேட கூட்டம் கூட்டியுள்ளது.

---

### சோவியத்தை...

தொடர்ந்து விரைவாக செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஜனாதிபதி யெனயேவ் முன்னர் பலம் பொருந்திய தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர் தீவிர கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர் இராணுவத்தின் ஆதரவும் இவருக்குண்டுமுன்னையஜனாதிபதிகளைப்போன்று இவரும் கடும் போக்காளர்எனக் கூறப்படுகிறது.

இதனால் எதிர்கால சோவியத் யூனியனின் வெளியுறவுக் கொள்கையிலும், கொர்பசேவினால் அமெரிக்காவுடன் செய்யப்பட்ட அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களிலும் பெரும் மாறுதல்கள் ஏற்படலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

---

### கொர்பசேவ்...

இதை எதிர்த்து வேலை நிறுத்த போராட்டம் ஒன்றுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

புதிய அரசை ஏற்கவேண்டாம் என அவர் அறை கூவல் விடுத்துள்ள போதிலும் சோவியத் மக்களின் நிலைப்பாடு குறித்து தெரியவரவில்லை -

---

### கொர்பசேவ் கருங்...

ரால் சிறைவைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை கொர்பசேவுடன் தான் தொடர்பு கொள்ள முயன்று இயலாமற் போய்விட்டதாக சோவியத் குடியரசின் தலைவர் பொரிஸ் யேல்ஸின் தெரிவித்துள்ளார்.

அவரின் உயிர் குறித்து தாம் அச்சப்படுவதாகக் குறிப்பிட்ட யேல்ஸின் அவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததாக ராஸ் செய்தி நிறுவனம் கூறியதையும் சுட்டிக்காட்டுகிறார்.

---

### காரைநகரில்...

பொன்னாலை, மூளாய்ப் பகுதியை நோக்கி சரமாரியாக ஷெல் தாக்குதல்களும் கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (18)

---

### உ. அ. ...

ஞள்ளது.

இதே போல உலர் உணவு அட்டையில்அங்கத்தவர்களின் அதிகரிப்பும் நிறுத்தப்பட்டுள்ளது. (08)

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 20.08.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## அ.தி.மு.க விற்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்

# பாராளுமன்றத்தில் கூச்சலிட்டனர்

மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தமிழகத்தில் வைத்து தாக்கப்பட்டது குறித்து நேற்று இந்தியப் பாராளுமன்றத்தில் தமிழக காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆட்சேபனை கிளப்பினர் இதனால் சபை நடவடிக்கை 15 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது.

அ. தி மு. கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கூச்சலிட்டனர். இதன்போது அ. தி. மு க உறுப்பினர்களுக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

நிலைமையை சமாளித்த சபை முதல்வர் அர்ஜீன்சிங் இது குறித்து பிரதமர் நரசிம்மராவ் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இத்தகைய சம்பவங்களை அரசு பார்த்திராது எனவும் குறிப்பிட்டார்

இதேவேளை அமைச்சர் சிதம்பரம் தாக்கப்பட்டது குறித்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விளக்கமளித்து விட்டார். அத்துடன் அது முடிந்துபோன காரியம்இதேதிரும்பத் திரும்ப கிளப்பக்கூடாது என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வாழப்பாடி ராமமூர்த்தி காங்கிரஸ் கட்சியை ஜெயலலிதாவிடம் அடகு வைத்துவிட்டார் என காங்கிரஸ் அதிருப்தியாளர் சிலர் தமிழகத்தில் சுவரொட்டிகள் ஒட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

### யுத்தக்கலையை

விட்டது என்றவுடன் உற்சாகம் குறைந்த நிலையில் காணப்பட்டார்கள். 500 போராளிகள் வீரமரணமடைந்தார்கள் என வேதனை படாமல் இவ்வளவுபேர் மரணித்துவிட்டார்கள் என அங்கலாய்ப்புக் கொண்டார்கள் இவ்வாறான ஆதங்க நிலையில் தமிழினம் இருக்கக்கூடாது. இது மக்கள் மனதில் ஏற்படக்கூடிய பலவீனத்தைக் காட்டுகின்றது.

எமது சமுதாயத்தில் யுத்தம் பற்றிய கற்பனைப்பார்வை கூட இல்லை. இதற்குக் காரணம் தமிழ் சமுதாயத்திற்கு யுத்தம் பற்றிய அறிவில்லை ஏனைய கலைகளை போட்டி போட்டு கற்கும் எமது இனம் யுத்தக்கலை பற்றி அறிய முன் வருவதில்லை. ஏனைய நாடுகள் யுத்தக்கலை கற்பிக்கப்படுகின்றது இதற்காக அங்கு இராணுவக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழர்களுக்கு இவ்வாறான வாய்ப்புக்கள் இல்லை. பாடசாலைகளில் சாரணியம் கடேட் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

இவ் வைபவத்தில் வே.பாலகுமார் அவர்கள் உரையாற்றும் போது ''நாம் கல்வி கற்ற காலத்தில் ஆசிரியர்களுக்கென ஒரு நெறிப்படுத்தப்பட்ட, ஒழுங்கு படுத்தப்பட்ட அமைப்பு அக்காலத்தில் உருவாக்கப்படவில்லை. ஆசிரியர்கள் சமுதாயத்தை நெறிப்படுத்த முடியாமல் இருந்ததாலே எத்தனையோ தடங்கல்கள் ஏற்பட்டன.

இன்று ஏழாம் எட்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்ட தன்மையில்போராட்டத்திற்கு தமது பங்களிப்பைச் செய்ய முன்வருகின்றார்கள். ஆனால் உயர்தர வகுப்புப் படிக்கும் மாணவர்கள் தமது பங்களிப்

# பங்களூர் ஆஸ்பத்திரியிலும் போராளிகள் தேடப்பட்டனர்

கர்நாடகத்தில் நேற்றுமுன் தினமிரவு 12 புலிகள் சயனைட் அருந்தி தற்கொலை செய்துகொண்டதையடுத்து அங்கு தொடர்ந்து பொலிஸார் தேடுதல் நடாத்தி வருகின்றனர்.

நேற்றுக்காலை பங்களூர் வைத்தியசாலையினுள்ளும் திடீரெனப்பொலிஸார்புகுந்து தேடுதல் நடாத்தினர். இதன் போது அங்கு சிகிச்சை பெற்றுவந்த போராளி ஒருவர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இதேவேளை இந்திய மத்திய புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன் கர்நாடகத்தில் தங்கியுள்ளார்.

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நியாய விலையில் பொருள்கள்

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு சங்கங்களுக்கும் நியாய விலையில் உணவுப் பொருள்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்யவுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருள்களின் விலை பன்மடங்கு உயர்த்துள்ளமையாலும் மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதாலுமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கூட்டுறவு சங்கங்களில் பங்கீட்டு அட்டைக்கு நியாய விலையில் பொருள்களை மக்களுக்கு வழங்குவதற்கான சகல செயற்பாடுகளையும் யாழ் செயலகம் மேற்கொண்டுள்ளது

# தீவைத்து கொளுத்தப்பட்டது

பொலநறுவ மாவட்டத்திச் செவனப்பிட்டிய சரஸ்வதி தமிழ் பாடசாலை இனம் தெரியாதவர்களினால் தீவைக்கப்பட்டது இதனால் இங்கிருந்த தளபாடங்கள் முழுவதும் எரிந்து சாம்பராகின.

பாடசாலைக்கு அருகில் உள்ள தமிழர்களது மூன்று வீடுகளும் தீவைத்துக்கொளுத்தப்பட்டன.

பொலநறுவ கல்வித் திணைக்கள அதிகாரிகள் இச்சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

---

பைச் செய்ய பின்னடிக்கின்றார்கள் அவர்களில் பெரும்பாலானோர் தெருவில் நிற்கின்ற நிலைமையைக் காண்கின்றோம்.

ஒரு மாணவன் மனதில் உண்மையான உணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களையே சார்ந்தது. ஆசிரியர் சமுதாயம் தம்மைத் தாமே உணர்ந்து இந்த நூற்றாண்டு முடிவிற்குள் தமிழீழத்தை வென்றெடுப்பதில் முனைப்பாகச் செயலாற்ற வேண்டும்'' என்றார்.

இச் செயலகத் திறப்பு வைபவத்தில் தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் அமைப்பாளர் அருணாசலம் பெறுப்பாள்ர் அருந்தவபாலன் ஆகியோரோடு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம், மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன்,யாழ் மாவட்ட தளபதி தினேஷ் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். 27

---

### சோவியத் இராணுவ

கொண்டுள்ள சோவியத் படைத் தளபதி அறிவித்துள்ளார்.

இதேவேளை பதவி மாற்றம் குறித்து சோவியத்தின் சர்ச்சைக்குரிய போல்டிக் குடியரசுகள் அச்சம் கொண்டுள்ளன. கடும் போக்காளரான யெனயேவ் இக்குடியரசுகளுக்கு சோவியத் படைகளை அனுப்பலாம் என அவை அச்சம்கொண்டுள்ளன.

---

### ஜனாதிபதி...

ஊர்ஜிதப்படுத்திய மொஸ்கோ வானொலி முன்னாள் ஜனாதிபதி கொர்ப்பசேவினால் அமுல் படுத்தப்பட்டசீர் திருத்தச் சட்டங்கள் அனைத்தும் செல்லுபடியற்றதாகியுள்ளதாக அறிவித்தது.

சோவியத்தில் ஆறுமாதங்களுக்கு அவசரகாலச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடாத்த தடைசெய்யப்பட்டுள்ளது.

தற்போது புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள கெனாடி யெனயேவ் கடும் போக்காளர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவருக்கு சோவியத் இராணுவம், கே. ஜி. பி புலனாய்வுத்துறை என்பன ஆதரவு அளிப்பது குறிப்பிடத்தக்கது